செய்தி வெளியீட்டு எண்– 24 நாள்- 09.01.2011

## ஆறாம் கட்டமாக
## மேலும் 10 இலட்சம் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொள்முதல் செய்யப்படும்!

## முதலமைச்சர் தலைமையில் நடைபெற்ற சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகளின் கூட்டத்தில் முடிவு!

## தமிழக அரசு அறிவிப்பு!

**இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து அமைக்கப்பட்ட சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவின் 21வது கூட்டம் 9.1.2011 ஞாயிறு காலை மாண்புமிகு முதலமைச்சர்** கலைஞர் **அவர்களின் தலைமையில் ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் அமைந்துள்ள தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் திருமதி டி. யசோதா (காங்கிரஸ்), திரு.எச். அப்துல் பாசித் (இந்திய யூனியன் முஸ்லீம் லீக்), திரு. மு. ஜெகன்மூர்த்தி (புரட்சி பாரதம்), திரு. து. ரவிகுமார் (விடுதலை சிறுத்தைகள்), சட்டமன்ற உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.**

**இக்கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகள் பின்வருமாறு :**

**1) 2006 சட்டமன்ற தேர்தலுக்கு முன்பாக தமிழக மக்களுக்கு தேர்தல் அறிக்கை மூலம் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும்வகையில், 2006 செப்டம்பர் 15 அண்ணா பிறந்த நாள் முதல் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து இதுவரை ஐந்து கட்டங்களில் 1 கோடியே 62 இலட்சத்து 80 ஆயிரம் வண்ணத்**

தொலைக்காட்சிப் பெட்டிகள் ஒளிவு மறைவற்ற முறையில் கொள்முதல் செய்யப்பட்டு இதுவரை ஏறத்தாழ 1 கோடியே 52 இலட்சத்து 25 ஆயிரம் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிலையில், பல்வேறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தங்கள் மாவட்டங்களில் வழங்கப்படுவதற்காக கூடுதல் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் தேவை என அளித்துள்ள கோரிக்கைகளை பரிசீலித்து, இதுவரை வழங்கப்படாமல் உள்ள தகுதியுள்ள அனைத்து குடும்பங்களுக்கும் வழங்கிட நடப்பாண்டில் ஆறாம் கட்டமாக மேலும் 10 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளைக் கொள்முதல் செய்வதென ஒருமனதாக முடிவெடுக்கப்பட்டது.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் திருமதி பூங்கோதை, தலைமைச் செயலாளர் திருமதி.எஸ். மாலதி, இ.ஆ.ப., நிதித் துறை முதன்மைச் செயலாளர் திரு. கே. சண்முகம், இ.ஆ.ப., தகவல் தொழில்நுட்பவியல் முதன்மைச் செயலாளர் திரு. பி.டபிள்யூ.சி. டேவிதார், இ.ஆ.ப., வருவாய்த் துறை முதன்மைச் செயலாளர் திரு. வி.கே. ஜெயக்கொடி, இ.ஆ.ப., முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் திரு.ந.சுந்தரதேவன், இ.ஆ.ப., தமிழ்நாடு மின்னணு நிறுவன மேலாண்மை இயக்குநர் டாக்டர் சந்தோஷ் பாபு, இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

* * *

வெளியீடு—இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—600 009.